# உங்களிலிருக்கிறவர் பெரியவர்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

அவர் பிழைத்திருக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை வாக்களிக்கின்றது. அவர் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைத்திருக்கிறீர்கள். "நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். அதே கிரியைகள். ஆனால் அதிகமான கிரியைகளை செய்வீர்கள். ஏனெனில் "நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். அவர் எல்லாவற்றின் மேலும் ஜெயங்கொண்டிருக்கிறார். அவர்தான் அன்று காற்றை நிறுத்தினார். அவர்தான் அந்த அணில்களை சிருஷ்டித்தார். அது இருமுறை சம்பவித்தது. சார்லி, ஒருமுறை அது நீங்கள் இருக்கும் இடத்தில் நிகழ்ந்தது. அடுத்த முறை சகோதரன் ஃபிரெட்டும் சகோதரன் பாக்ங்ஸூம் எங்களுடன் மலையின் மேல் இருந்த போது நிகழ்ந்தது.

இது ஜெர்மனியில் நிகழ்ந்தது. **அப்பொழுது என் ஒவ்வொரு பக்கத்திலும் பதினைந்து மந்திரவாதிகள்...** பில்லியும், சகோதரன் ஆர்கன்பிரைட்டும், என்னைக் காண அவர்களுக்கு அனுமதி தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள், "இந்த கூடாரத்தைச் சிதறப் பண்ணப் போகிறோம்"

என்று சவால்விட்டனர். **அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டு, மந்திரங்களைச் சொல்லி, தங்கள் தெய்வத்தை (பிசாசை) அழைத்தனர். அப்பொழுது பலத்த புயல் காற்று வீசியது.** அந்த கூடாரத்தில் முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் ஜெர்மானியர் அமர்ந்திருந்தனர். **கூடாரம் இப்படியாக மேலே உயர்ந்து, கீழே விழுந்தது.** அவர்கள் ஒரு பறவையின் சிறகை கத்தரியால் வெட்டி, அதை கூடாரத்துக்கு நேராக காண்பித்துக் கொண்டிருந்தனர். **அவர்கள் அங்கு அமர்ந்திருந்து, தங்கள் மந்திரங்களை ஓதி,** இந்த மூன்று பரிசுத்த வார்த்தைகளை, "**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஊஊ ஊஊ ஊஊ ஊஊ; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஊஊ ஊஊ ஊஊ**" என்பதாக ஓதிக் கொண்டிருந்தனர்.

**அப்பொழுது பலத்த புயல்காற்று தோன்றினது. ஆம், சாத்தான் வான**

**மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவன். அவர்கள் புயல் காற்றை வரவழைத்தனர்.** அந்த பெரிய கூடாரம் ஒரு நகர வீடு வரிசை (City block) அளவிற்கு அவ்வளவு பெரியதாயிருந்தது. கான்வஸ் (Canvas) துணியினால் அது தைக்கப்பட்டிருந்தது. **காற்று அதற்கடியில் புகுந்து அதை அப்படியே தூக்கியது. காற்றும் மின்னலும் சேர்ந்து அதை பறக்கச் செய்தது.** நானோ தொடர்ந்து பிரசங்கம் செய்து கொண்டேயிருந்தேன்.

அவர்கள் தங்கள் மந்திரங்களை ஓதி, அந்த மூன்று சிறிய பரிசுத்த வார்த்தைகளாகிய, '**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி**' என்பவைகளை இரு புறத்திலும் உச்சரித்துக் கொண்டேயிருந்தனர். **அவர்கள் வணங்கின நிலையில் இருந்தபோது, அவர்களைப் பிசாசுகள் சூழ்ந்து கொண்டிருப்பதை நான் கண்டேன்.** ஆனால் அது கட்டப்படவில்லை.

நான் சகோதரன் லௌஸ்டரிடம், “இதை நீங்கள் மொழி பெயர்க்க வேண்டாம்” என்று கூறி விட்டு,

“சகோதரன் ஆர்கன்பிரைட், ஜெபம் செய்து கொண்டிருங்கள்” என்றேன்.

**நான், “பிதாவாகிய தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நீர்தான் என்னை இங்கு அனுப்பினீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெர்மானிய நாட்டில் காலடி வைத்தேன். ஏனெனில் நீர் என்னை இங்கு அனுப்பினீர்.** அந்த மேகத்திற்கு என் மீது எவ்வித அதிகாரமுமில்லை. ஏனெனில் நான் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்காக இங்கு அனுப்பப்பட்டுள்ளேன். **இங்கிருந்து நீ புறப்பட்டுச் செல்ல இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்” என்றேன்.**

**அப்பொழுது இடிகள் முழக்கமிட்டுக் கொண்டே, உருண்டோடிவிட்டன. சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினது. கூடாரமும்**

**அமைதி பெற்று தன் சுயநிலைக்கு வந்தது.**

**பத்து நிமிடங்களுக்குள் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் பிரசங்க பீடத்தை சுற்றிலும் வந்து, இரக்கத்திற்காக கெஞ்சி, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் காண விரும்பினர்.** ஏன்? "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்**" பாருங்கள்?

"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" இந்த துன்பம், துயரங்களைக் காணும்போது, ஓ, சகோதரனே, சகோதரியே, நமக்கு எவ்வித கவலையுமில்லை. **தேவன் மகத்துவமுள்ளவர். அவர் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் நம்புகின்றீர்களா?** (சபையோர் – "ஆமென்" என்கின்றனர் - ஆசி).

*செய்தி:* 63-11-10E *உங்களிலிருக்கிறவர்*

★★★★★